# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 74 — 1973 අගෝස්තු 24 වැනි සිකුරාදා — 1973.08.24

74 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 863 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. | 864 | ஏலவிற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

*இலங்கைப் போக்குவரத்துச் சபை.*

*சேதப்பட்ட, அரித்துத் தின்னப்பட்ட வெற்றுத் தகரப் பீப்பாக்களின் விற்பனை*

*கொழும்பு-5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர், 1973.09.18 ஆந் தேதி மு. ப. 10.00 மணிவரை இலங்கை முழுவதிலும் இ. போ. ச. சாலைகளில் கூறுகளாகவுள்ள சேதப்பட்டதும் அரித்துத் தின்னப்பட்டதுமான 45/46 கலன் கொள்ளளவு கொண்டதும் மெல்லிய, தடித்த அளவுகளிலுள்ளதுமான வெற்றுத் தகரப் பீப்பாக்களைக் கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான பொறியிட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.*

*மீளளிக்கப்படமாட்டாத கேள்விப் பத்திரக் கட்டணம் 10 ரூபாவையும் அத்துடன் மீள்ளிக்கப்படக்கூடிய கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் 250 ரூபாவையும் கட்டுவதன் பேரில், கேள்விப் பத்திரங்களை எனது அலுவலகத்திலிருந்து 1973.09.17 ஆந் தேதி பி. ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.*

*அந்தவந்தச் சாலை அத்தியட்சகர்களுடன் ஒழுங்கு செய்து வழக்கமான வேலை செய்யும் நேரங்களில் இத் தகரப் பீப்பாக்களைப் பார்வையிடலாம். அந்தவந்தச் சாலைகளிலுள்ள தகரப் பீப்பாக்களின் தொகையைக் காட்டும் நிரலையும் மேலதிக விவரங்களையும் இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

*பிரதம விநியோக உத்தியோகத்தர்.*

*விநியோகப் பகுதி,*
*வெரகெரை,*
*பொரலஸ்கமுவை.*

*8-942—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74*

---

*இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்*

*பெற்றோலியம் நெளிகுழாய்களை (கோலஸ்) வழங்கல்.*

*பெற்றோலியம் நெளிகுழாய்களை வழங்கிக் கொள்வதற்கான பொறியிட்ட கேள்விகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.*

*விவரக் கூற்றுக்களையும் கேள்வி நிபந்தனைகளையும் மீளளிக்கப்படும் காசு வைப்பாக ரூ. 100 கொடுத்து, பண்டசாலை வழங்கல்கள் முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*கேள்விகள் 1973 செப்ரம்பர் 11 ஆந் தேதி காலை 10.00 மணியுடன் முடிவடையும்.*

*பண்டசாலை வழங்கல்கள் முகாமையாளர்.*

*113, காலி வீதி,*
*கொழும்பு 3.*

*8-938—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74*

---

### *முக்கிய அறிவித்தல்*

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

தும்பு கைத்தொழிற்குரிய வண்ணச் சாயங்களும் இரசாயனங்களும் வழங்குவதற்குத் தயாரிப்பாளர்களிடமிருந்தும் தயாரிப்பாளர்களின் முகவர்களிடமிருந்தும் கேள்விகளைக் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத்தலைவர் 1973.10.24 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

2. முழு விபரங்கட்கும் கேள்விப்படிவங்கட்கும் சிறு கைத்தொழிற்றிணைக்களத்துக்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதிர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(4/32)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.08.10.

8-878—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

### பிரசித்த ஏல விற்பனை

மாவட்ட நீதிமன்றம் அநுராதபுரம்

மேற்படி கோட்டில் சமர்ப்பிக்கப்பட்ட பொருட்களுள் ஒருவராலும் கோரப்படாதவைகளும், பறிமுதல் செய்யப்பட்டனவுமாகிய பின் குறிக்கப்படும் பொருட்கள் 1973 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9 ம் திகதி மாலை 2 மணி தொடக்கம் கோட்டு மைதானத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| வழக்கு இலக்கம் | | பொருட்கள் | |
|---|---|---|---|
| A646/72 | .. | துவிச்சக்கரவண்டி, AE. 80342 | |
| A1885/70 | .. | துவிச்சக்கரவண்டி, DM. 540 | |
| A2078/70 | .. | துவிச்சக்கரவண்டி, CM. 286 | |
| A299/71 | .. | துவிச்சக்கரவண்டி, CB. 672 | |
| A1842/70 | .. | துவிச்சக்கரவண்டி, DP. 926 | |
| A451/72 | .. | துவிச்சக்கரவண்டி, GD. 9864 | |
| A380/72 | .. | துவிச்சக்கரவண்டி, CN. 2535 | |
| ஷை | .. | துவிச்சக்கரவண்டி, AS. 0947 | |
| A373/72 | .. | துவிச்சக்கரவண்டி, AB. 52520 | |
| 39649 | .. | தகடுகள் | 15 |
| 26411 | .. | முதிரைக் குத்திகள் | 19 |
| 26412 | .. | முதிரைக் குத்திகள் | 18 |
| 40787 | .. | முதிரைக் குத்திகள் | 5 |
| ஷை | .. | தேக்குக் குத்திகள் | 7 |
| 35939 | .. | தேக்குக் குத்திகள் | 5 |
| 41174 | .. | " குலங்கிக் " பலகைகள் | 59 |
| 44845 | .. | வல்அம்பறவும் தியவைக் குத்திகள் | 46 |
| 39333 | .. | முதிரைக் குத்திகள் | 17 |
| 30860 | .. | கல்மில்ல குத்திகள் | 17 |
| 35426 | .. | முதிரைக் குத்திகள் | 3 |
| ஷை | .. | யாவறணைக் குத்தி | 1 |
| 40335 | .. | முதிரைப் பலகைகள் | 76 |
| 25470 | .. | கல்மில்லப் பலகைகள் | 110 |

| வழக்கு இல. | | பொருட்கள் |
|---|---|---|
| — | .. | முள்ளுக் கம்பிச் சுருள்கள் |
| — | .. | ரோச் லைற்றுகள் |
| — | .. | கத்திகள் |
| — | .. | வெற்றுப் போத்தல்கள் |
| — | .. | போத்தல் சாடிகள் |
| — | .. | பிளாஸ்டிக் சாடிகள் |
| — | .. | வெற்றுப் பீப்பாக்கள் |
| — | .. | வெற்று டின்கள் |
| — | .. | மண் வெட்டிகள் |
| — | .. | வாளிகள் |
| — | .. | அலுமினியம் முட்டிகள் |
| — | .. | பித்தளைக் கம்பிகள் |
| 37468 | .. | உடைந்த கண்ணுடி அலுமாரி |
| 37662 | .. | உடைந்த கண்ணுடி அலுமாரி, கோடாரிகள் |

மேலும்—

(1) பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் ஏலம் தொடங்குதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன் கோட்டுச் சக்கடத்தார் உத்தரவுடன் பார்வையிடலாம்.

(2) பொருள் வாங்கியவர் உடனடியாக முழுப்பணத்தையும் கட்டி பொருட்களை அப்புறப்படுத்திவிட வேண்டும்.

(3) காசோலை மூலம் பணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பணம் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

டபிள்யூ. பி. என். த சில்வா,
மாவட்ட நீதிபதி.

மாவட்ட நீதிமன்றம்,
அநுராதபுரம்,
1973 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 08 ந உ.

8-865—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஓகத்து | .. | 3.8.73 | வெள்ளி | .. | 25.7.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 10.8.73 | வெள்ளி | .. | 1.8.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 17.8.73 | வெள்ளி | .. | 8.8.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 24.8.73 | வெள்ளி | .. | 15.8.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 31.8.73 | வெள்ளி | .. | 22.8.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | .. | 7.9.73 | வெள்ளி | .. | 29.8.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 14.9.73 | வெள்ளி | .. | 5.9.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 21.9.73 | வெள்ளி | .. | 11.9.73 | செவ்வாய் | .. | ந.ப. 12.00 |
| | | 28.9.73 | வெள்ளி | .. | 19.9.73 | புதன் | .. | ந.ப. 12.00 |

ஏல். டபிள்யு. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சகத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.